# எண்ணெய் வித்துக்களுக்கான விலை முன்னறிவுப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ் நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவுப்பு திட்டமானது, எண்ணெய் வித்துக்களுக்கான விலை முன்னறிவிப்பை வெளியிட்டுள்ளது.

**அ. நிலக்கடலை**

நிலக்கடலை இந்தியாவில் ஒரு முக்கியமான எண்ணெய் வித்து பயிர் ஆகும், இது நாட்டின் மொத்த எண்ணெய் வித்துக்கள் பரப்பளவு மற்றும் உற்பத்தியில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. நிலக்கடலை உற்பத்தியில் சீனா முதலிடத்தில் உள்ளது. அதனை தொடர்ந்து இந்தியா, நைஜீரியா, சூடான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் உள்ளன. 2022-23 ஆம் ஆண்டிற்கான எண்ணெய் வித்துக்கள் மற்றும் வணிகப் பயிர்களின் உற்பத்தியின் மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, நிலக்கடலை உற்பத்தி 2021-22 ஆம் ஆண்டில் 101.35 லட்சம் டன்னாக இருந்த நிலையில் தற்போது, 102.82 லட்சம் டன்னாக மதிப்பிடப்பட்டுள்ளது. குஜராத் (44.89 இலட்சம் டன்கள்) நிலக்கடலை உற்பத்தியில் நாட்டில் முதலிடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து ராஜஸ்தான் (16.96 இலட்சம் டன்), தமிழ்நாடு (10.47 இலட்சம் டன்), மத்தியப் பிரதேசம் (6.71 இலட்சம் டன்), ஆந்திரப் பிரதேசம் (5.16 இலட்சம் டன்), கர்நாடகா (4.87 இலட்சம் டன்) ஆகிய மாநிலங்களாகும்.

நிலக்கடலை உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடு முக்கியமான மாநிலமாகும். நம் மாநிலத்தில் சுமார் 10.47 லட்சம் டன் நிலக்கடலை உற்பத்தி செய்யப்படுகிறது. திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், நாமக்கல், கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் நிலக்கடலை அதிகளவு பயரிடப்படுகிறது. இம்மாவட்டங்களில், பெரும்பாலான பகுதிகளில் நிலக்கடலை ஜூலை

முதல் ஆகஸ்ட் வரையிலும் (ஆடி பட்டம்), ஜனவரி முதல் பிப்ரவரி வரையிலும் (தை பட்டம்) பயிரிடப்படுகிறது. டி.எம்.வி 10 (உள்ளூரில் பட்டாணி) என்று அழைக்கப்படும் ரகம் பெரும்பாலும் எண்ணெய் நோக்கத்திற்காக வளர்க்கப்படுகிறது. டி.எம்.வி 7, டி.எம்.வி 2, வி.ஆர்.ஐ 2 மற்றும் ஜே.எல்24 (மிட்டாய்ப் பொருட்களுக்கு) ஆகியவை தமிழக விவசாயிகளால் பரவலாகப் பயிரிடப்படும் இரகங்களாகும்.

விலை முன்னறிவிப்புத் திட்ட குழு, கடந்த 15 ஆண்டுகளாக திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய நிலக்கடலை விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், அறுவடையின் போது தரமான நிலக்கடலை பண்ணை விலை கிலோவிற்கு ரூ.80 முதல் 85 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மேலும், சந்தை வரத்து மற்றும் பருவ மழை பொறுத்து நிலக்கடலை விலையில் சிறிய ஏற்ற இறக்கங்கள் இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**ஆ. எள்**

வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் மூன்றாவது முன் கூட்டிய மதிப்பீட்டின் படி, இந்தியாவில் **2022-23** ஆம் ஆண்டு எள் சுமார் **16.27** இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு **7.50** இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படும் எனக் கணித்துள்ளது. மேற்கு வங்காளம், மத்திய பிரதேசம், இராஜஸ்தான், உத்திர பிரதேசம், குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் எள் அதிகளவு பயிரிடப்படுகிறது .

தமிழ்நாட்டில், **2021-22**-இல் கிட்டத்தட்ட 0.**47** இலட்சம் எக்டர் பரப்பளவில், எள் பயிரிடப்பட்டு 0.**28** இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. கள்ளகுறிச்சி, ஈரோடு, தஞ்சாவூர், கரூர், சேலம், விழுப்புரம், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் எள்

பெருமளவு பயிரிடப்படுகிறது. சந்தை தகவலின்படி, சந்தைக்கு எள்ளின் வரத்து குறைந்துள்ளதால் சந்தை விலை அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது .

எள் மற்றும் எள் தொடர்பான பொருட்களுக்கான நிலையான தேவை மற்றும் ஆரோக்கியமான உணவு போன்ற காரணிகளால் அதிகரித்துள்ளது. எள் விதைகள் புரதம், வைட்டமின்கள் மற்றும் ஆக்ஸிஜனேற்றங்களின் வளமான ஆதாரங்களாகும். விளைச்சல் குறைந்துள்ளதால் தமிழகம் முழுவதும் எள் விலை மிகவும் உயர்ந்துள்ளதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விலை முன்னறிவிப்புத் திட்ட குழு, கடந்த 15 ஆண்டுகளாக சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய எள் விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், அறுவடையின் போது தரமான எள் பண்ணை விலை கிலோவிற்கு ரூ.130 முதல் 135 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விதைப்புக்கான முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

1. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
   வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422-2431405
2. இயக்குனர் மற்றும் முனை அதிகாரி
   நீர் மற்றும் புவியியல் ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422-6611278

**தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
எண்ணெய் வித்துக்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 641003
தொலைபேசி : 0422-2450812

# Price Forecast for Oilseeds

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University, Coimbatore has developed market advisory for oilseeds.

## A. Groundnut

Groundnut is an important oilseed crop in India which occupies second position in terms of both area and production. Globally, China ranks first in groundnut production followed by India, Nigeria, Sudan and USA. According to the Third Advance Estimates of Production of Oilseeds and Commercial Crops for 2022-23, groundnut production is estimated at 102.82 lakh tonnes as compared to 101.35 lakh tonnes in 2021-22. Gujarat stood first in production with 44.89 lakh tonnes followed by Rajasthan (16.96 lakh tonne), Tamil Nadu (10.47 tonnes) and Karnataka (4.87 lakh tonnes)

Tamil Nadu is one of the major groundnut growing states of the country accounting for nearly 10.47 lakh tonnes annually. Tiruvannamalai, Villupuram, Vellore, Kanchipuram, Thiruvallur, Cuddalore, Namakkal, Krishnagiri, Salem and Dharmapuri are the major growing districts in Tamil Nadu. In most of these districts groundnut is sown during July to August (Adi pattam) and January to February (Thai pattam). TMV10 (locally called Pattani) variety is mostly grown for oil purpose. TMV7, TMV2, VRI2, JL24 (specific for confectionery) are the varieties widely cultivated by the farmers in Tamil Nadu.

Price Forecasting Scheme team has analyzed past 15 year historical prices that prevailed in Tindivanam Regulated Market for groundnut. As per the results of the analysis and market survey, the farmgate price of good quality groundnut during harvest would be around Rs.80-85 per Kg. The price may subject to change based on the market arrivals and monsoon. Hence, farmers are advised to take up the sowing decision accordingly.

## B.Sesame

Sesame cultivation is estimated to around 16.27 lakh hectares with a production of 7.50 lakh tonnes in India during 2022-23 according to the Third Advance Estimates of Ministry of Agriculture and Farmer Welfare, Government of India, New Delhi. West Bengal, Madhya Pradesh, Rajasthan, Uttar Pradesh, Gujarat and Tamil Nadu in India are the major sesame producing states in the country.

In Tamil Nadu, it is grown in an area of 0.47 lakh hectares with a production of 0.28 lakh tonnes during 2021-22. Sesame is largely grown in Kallakurichi, Erode, Thanjavur, Karur, Salem, Villupuram, Cuddalore and Nagapattinam districts.

The stable demand for sesame seeds and sesame related products is due to the healthy eating trend. Sesame seeds are also rich sources of protein, vitamins and antioxidants. According to the trade source, sesame prices across Tamil Nadu have soared to record high due to reduced yield.

Price forecasting team has analyzed the past 15 year prices for sesame that prevailed in Sivagiri Regulated Market of Erode. As per the results of the time series analysis, the farm gate price of good quality of sesame during harvest would be Rs. 130-135 per kg. Hence, the farmers are advised to take appropriate sowing decision.

***For Market information, please contact:***

*(i) Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies (CARDS)*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-2431405*

*(ii)The Director and TN-IAMP Nodal Officer*
*Centre for Water and Geospatial Studies*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-6611278*

***For Technical Details, please contact:***
*Professor and Head*
*Department of Oil Seeds*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone No: 0422-2450812*